அதைப்பற்றி, எதிர்த்து பேசுவதற்குக்கூட அச்சப்பட்டுக் கொண்டோ அல்லது கேட்பதிலே பிரயோசனம் இல்லை என்றோ நினைத்துக்கொண்டு இருந்தார்கள். ஆனால், இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, மறுபடியும் நூற்றுக்கணக்கான கோரிக்கைகளை எங்கள் முன்னாலே வைத்திருக்கிறார்கள். அவைகள் எல்லாம் பரிவோடு பரிசீலிக்கப்பட்டு வருகின்றன, ஆசிரியர்கள் போராடினாலும். போராடாவிட்டாலும். அவர்களுடைய கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக ஒரு கட்டுப்பாடு எங்களுக்கு இருக்கிறது. இன்றைக்கு இருக்கிற நிதிநிலை பற்றாக்குறை காரணமாக, நிதி சம்பந்தமான கோரிக்கைகளை நாங்கள் இந்த நேரத்திலே நிறைவேற்ற முடியாத நிலையில் இருக்கிறோம், நிதி சம்பந்தப்படாத பிரச்சினைகளைப் பரிவோடு பரிசீலித்து. தக்க நடவடிக்கை எடுப்பதற்கு தயாராக இந்த அரசு இருக்கிறது என்பதைத் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆசிரியர்கள்பால், மிகுந்த அனுதாபத்தோடு செயல்படுகிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன் (மேசையைத்தட்டும் ஒலி),

3, விதி 110இன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை,

தமிழகத்தில் மின்வெட்டு நீக்கப்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 110இன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவைக்கு ஓர் அறிவிப்பை வெளியிட அனுமதி கோரியுள்ளார்கள், அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்,

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் ஈடில்லா தொழில் வளர்ச்சிக்கும், தொழில் பெருக்கத்திற்கும் மின்சாரம் இன்றியமையாதது என்பதை நன்கு உணர்ந்த இந்த அரசு, பொறுப்பேற்ற நாள் முதல், மின் உற்பத்தியை அதிகரிப்பதில் முன்னுரிமை கொடுத்து, நடவடிக்கைகளை மேற்கொண்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள். கடுமையான சூழ்நிலையின் இடையே இந்த அரசு பொறுப்பேற்றபோது, உயர் அழுத்த தொழிற்சாலைகளின் மின் உபயோகத்தில் 25 விழுக்காடு மின்வெட்டும், மின் சுமையில், அதாவது மேக்சிமம் டிமாண்டில் 30 விழுக்காடு மின்வெட்டும், அமுலில் இருந்து வந்தது, இதனால், தொழிற்சாலைகளின் உற்பத்தித்திறன் வெகுவாக பாதிக்கப்பட்டதோடு, உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விலையும் கணிசமாக அதிகரித்தது,

மின் ஆக்கிகள். அதாவது ஜெனரேட்டர்ஸ் மிக அதிக அளவில் உபயோகப்படுத்தப்பட்டதால், டீசல் நுகர்வும். அதாவது டீசல் கன்சம்சனும் அதிகரித்து, பல பிரச்சினைகளுக்கு வழி வகுத்தது, இயற்கை ஒரு புறம் உதவாத நிலையில், மற்றொரு புறம் அனல் மின் நிலையங்களை இயக்குவதற்குத் தேவையான நிலக்கரி கிடைக்காது ஓரிரு நாட்களுக்கு மட்டுமே நிலக்கரி கையிருப்பு உள்ள அவல நிலை இருந்தது,

மக்கள் நலனில் தீவிர ஆர்வம் கொண்ட இந்த அரசு எடுத்துக்கொண்ட ஆக்கபூர்வமான நடவடிக்கைகளின் காரணமாக, இந்நிலை தற்போது முற்றிலும் மாற்றப்பட்டு ஒரு மாதத்திற்குத் தேவையான நிலக்கரி நம் கைவசம் தாராளமாக உள்ளது,

முற்பகல் 10—55

எண்ணூர், தூத்துக்குடி மற்றும் மேட்டூர் அனல் மின் நிலையங்கள் இந்த அரசு எடுத்துக்கொண்ட துரித நடவடிக்கைகளின் காரணமாக தற்போது நல்லமுறையில் இயக்கப்பட்டு தங்களுடைய முழுமையான உற்பத்தித் திறனை எட்டியுள்ளன, புனல் மின் சக்தி நிலையங்களும் சிறந்த முறையில் தங்கள் முழு உற்பத்தித் திறன் அளவுக்கு மின் உற்பத்தி செய்யத் தேவையான நீரையும் இயற்கை நமக்கு ஒரு வரப்பிரசாதமாக இந்த ஆண்டு அளித்துள்ளது, நாங்கள் எடுத்துக்கொண்ட சீரிய முயற்சிகளின் பலனாக சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு மின் உற்பத்தி சுமார் 10 விழுக்காடு உயர்ந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி),

மின் உற்பத்தியில் நாங்கள் எடுத்துக்கொண்ட ஆக்க பூர்வமான நடவடிக்கைகளின் காரணமாக மின் வினியோகத்தில் தற்போது அமலில் உள்ள மின் சுமையில் 10 விழுக்காடு மின் வெட்டையும் பவர் கட்டையும் இன்று முதல் முழுமையா நீக்க ஆணையிட்டுள்ளேன், (மேசையைத் தட்டும் ஒலி), தமிழகத்தின் சரித்திரத்தில் இது ஒரு மாபெரும் திருப்புமுனையாகும் (மேசையைத் தட்டும ஒலி), கோடை காலத்தில் மின் வெட்டு அதிகரிக்கப்படும் என்று அறிவிப்புகளை எதிர்பார்த்த தமிழக மக்களுக்கு மின் வெட்டே இல்லை என்ற இந்தச் செய்தி தேனாக இனிக்கும் என நான நம்புகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி),

4, கவன ஈர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து கவன ஈர்ப்பு திரு. சி. ஞானசேகரன் இருக்கையில் இல்லை.